www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# அரையாண்டுத் தேர்வு - 2024

வகுப்பு : 11 **பொதுத்தமிழ்** பதிவு எண் :

காலம் : 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   (அ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை (ஆ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை
   (இ) ஏதிலிக்குருவிகள் – மரபுக் கவிதை (ஈ) யானை டாக்டர் – குறும் புதினம்

2. 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?
   (அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன்
   (இ) அண்ணாமலையார் (ஈ) முருகன்

3. பவணந்தி முனிவரின் நன்னூல் ஒரு ________.
   (அ) முதல்நூல் (ஆ) வழிநூல்
   (இ) சார்புநூல் (ஈ) மொழிபெயர்ப்பு நூல்

4. **கூற்று:** எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.
   **காரணம்:** இந்நூல், சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது.
   (அ) இரண்டும் சரி (ஆ) இரண்டிற்கும் தொடர்பில்லை
   (இ) கூற்று தவறு; காரணம் சரி (ஈ) கூற்று சரி; காரணம் தவறு

5. பொருத்துக.
   (அ) வாழ்பவன் – (1) காத்திருப்பவன்
   (ஆ) வாழாதவன் – (2) ஒத்ததறிபவன்
   (இ) தோன்றுபவன் – (3) புகழ் தரும் பண்புடையவன்
   (ஈ) வெல்ல நினைப்பவன் – (4) இசையொழித்தவன்
   (அ) அ–2, ஆ–3, இ–1, ஈ–4 (ஆ) அ–2, ஆ–4, இ–3, ஈ–1
   (இ) அ–2, ஆ–1, இ–4, ஈ–3 (ஈ) அ–2, ஆ–1, இ–3, ஈ–4

6. 'தமிழ்' என்னும் சொல்லுக்கான பொருள் ________.
   (அ) இனிமை (ஆ) பண்பாடு
   (இ) அகப்பொருள் (ஈ) இவை அனைத்தும்

7. "ஒட்டுப் போடாத
   ஆகாயம் போல – இந்த
   உலகமும் ஒன்றேதான்... – இக்கவிதையில் பயின்றுவருவது.
   (அ) உவமை (ஆ) உருவகம்
   (இ) உள்ளுறை (ஈ) இறைச்சி

8. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ________.
   (அ) 9 (ஆ) 3 (இ) 27 (ஈ) 13

9. வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர் ________.
   (அ) அப்துல் ரகுமான் (ஆ) இன்குலாப்
   (இ) பாரதிதாசன் (ஈ) சுந்தரனார்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. 2009ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்கான 'ஆஸ்கர் விருது' பெற்றவர் ________
(அ) இளையராஜா (ஆ) லதா மங்கேஷ்கர்
(இ) ஏ.ஆர்.இரகுமான் (ஈ) ஆர்.கே.சேகர்

11. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று ________
(அ) சிறுதேர் (ஆ) சிறுபறை (இ) சிற்றில் (ஈ) சாழல்

12. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்________
(அ) மக்கள் அவை (ஆ) மக்கள் வெள்ளம்
(இ) உயிர் அலை (ஈ) மக்கள் அலை

13. ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்து ஆங்கிலேய அரசு வழங்கிய 'சர்' பட்டத்தைத் திருப்பி அளித்தவர் ________
(அ) இன்குலாப் (ஆ) தாகூர்
(இ) பாரதிதாசன் (ஈ) பெ.சுந்தரனார்

14. காற்றின் தீராத பக்கங்களில் ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் சென்றது எது?
(அ) காற்று (ஆ) சிறகு (இ) இறகு (ஈ) மேகம்

## பகுதி – II

### பிரிவு –1

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
16. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
17. 'எப்போது மருந்து தேவையில்லை' என்று திருவள்ளுவர் கூறுகிறார்?
18. பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்திய மேலைநாட்டுக் கவிஞர்களைக் குறிப்பிடுக.
20. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) திருப்புகழ் (ஆ) மேலவை
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) பெற்று (ஆ) பிரிந்தோர்
24. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போகவேண்டும் மகிழ்ச்சி.
25. உயிர்முதல், மெய்ம்முதல் – விளக்குக.
26. மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
(அ) எதிர்நீச்சல் (ஆ) நிறைகுடம்
27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
வலி, வளி, வழி
28. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
(அ) பிண்ணாக்கு (ஆ) அறிவில்லாதவன்

30. பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக.
நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்.

## பகுதி – III

### பிரிவு –1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

31. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

32. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

34. திருமலை முருகன் பள்ளு கூறும் தென்கரை நாட்டின் வளங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

35. பனைமரத்தின் பயன்களைப் பட்டியலிடுக.

36. 'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.

38. 'தாமஸிகம்' என்றால் என்ன?

### பிரிவு – 3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×4=12

39. (அ) உருவக அணியைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.
– இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.
(அ) வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் **(ஆளி)** – _________
(ஆ) அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் **(அகம்)** – _________
(இ) வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது **(மானம்)** – _________
(ஈ) வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன் **(தாரி)** – _________

41. 'ஓடு' என்னும் வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.

42. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

தமிழன் திருநாள் பொங்கலென்றால் – அதில்
தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?
புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே – யாரும்
புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?
யாதும் ஊரெனச் சாற்றியதும் – மக்கள்
யாவரும் கேளிர் என்றதுவும்
மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் – இன்று
வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?

– பெ. தூரன்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

43. தமிழாக்கம் தருக.

(அ) Nobody can hurt me without my permission.

(ஆ) You must be the change you wish to see in the world.

(இ) A picture is worth a thousand words.

(ஈ) An eye for an eye only ends up making the whole world blind.

**குறிப்பு: செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

திருவாசகம் என்பது சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும். இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர். இது சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது. திருவாசகத்தில் 51 திருப்பதிகங்கள் உள்ளன. இவற்றுள் மொத்தம் 658 பாடல்கள் அடங்கியுள்ளன. இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப் பெற்றுள்ளன. பக்திச் சுவையும் மனத்தை உருக்கும் தன்மையும் கொண்டவை திருவாசகப் பாடல்கள். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது முதுமொழி. திருச்சாழல் தில்லைக் கோவிலில் பாடப்பெற்றது. ஜி.யு. போப் திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர். திருவாதவூரைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார். மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் திருவாசகம், திருக்கோவையார் ஆகியனவாகும்.

**வினாக்கள்:**

(அ) திருவாசகத்தை இயற்றியவர் யார்?

(ஆ) சைவத் திருமுறைகள் எத்தனை?

(இ) திருச்சாழல் எங்குப் பாடப்பட்டது?

(ஈ) மாணிக்கவாசகர் பிறந்த ஊர் எது?

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

**(அல்லது)**

(ஆ) 'மதீனா நகரம் ஒரு வளமான நகரம்' என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. (அ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) சமணக் கல்வி, பௌத்தக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

46. (அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

**(அல்லது)**

(ஆ) வாடிவாசல் கதையினைச் சுருக்கி எழுதி அதன் வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளைக் குறிப்பிடுக.

## பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

(அ) "உண்டால் அம்ம...." எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

(ஆ) "வடு" என முடியும் குறளை எழுதுக.

**************



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com